**களுத்துறை நகர சபை**

**களுத்துறை மாவட்டம்**

---------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

-------------------------------

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 23 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 23 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 29 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான தீர்வை வரிக்கு தீர்வை வரியாளருக்கு வழங்கப்பட்ட தரகுத் தொகையான ரூபா 990,962 செலவினமாகக் கணக்கில் காட்டப்பட வேண்டுமாயினும், தீர்வை வரி வருவாயிலிருந்து அதனைக் கழித்துக் காட்டியமையால் மீளாய்வாண்டிற்கான தீர்வை வரி வருவாய் மற்றும் செலவினம் என்பன ஒவ்வொன்றும் ரூபா 990,962 குறைவாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 20,746 தொடர்பாகக் கடன் கொடுத்தோர் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாமையால்

மீளாய்வாண்டினது கடன் கொடுத்தோர் தொகை ரூபா 20,746 குறைவாகவும் ஆண்டிற்கான செலவினம் ரூபா 20,746 குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்கான மூலதன உதவு தொகை மற்றும் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வேலைகளுக்கான கடன் பட்டோர் தொகை என்பன ஒவ்வொன்றும் ரூபா 465,398 அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) களுத்துறை தெற்கு கமநல சேவை மாவத்தை மதகு மற்றும் மழை நீர் வடிகாலை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் தொடர்பாகக் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த தொகை ரூபா 553,954 ஆகும். எவ்வாறாயினும், கடன் கொடுத்தோர் தொகை ரூபா 650,996 ஆகக் காட்டப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான வேலைகளுக்கெனக் கடன் கொடுத்தோர் தொகை ரூபா 97,042 அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் உள்ளவாறான கையிருப்புப் பெறுமதி ரூபா 5,185,802 ஆகிய போதும், அது நிதிக் கூற்றுக்களில் ரூபா 16,120,486 ஆகக் காட்டப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான பொதுக் களஞ்சியக் கையிருப்பு ரூபா 10,934,684 அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

---------------------------------

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 28,650,545 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டினது மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 40,755,710 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் ரூபா 12,105,165 பின்னடைவு தென்பட்டது.

## 2. வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை

மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய் உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 27,937 | 18,469 | 19,355 |
| (ii) | குத்தகை வாடகை | 7,433 | 6,943 | 1,077 |
| (iii) | அனுமதிப் பத்திரக்கட்டணம் | 638 | 638 | - |

### 2.2 தீர்வை வரி

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்த ரூபா 24,274,938 நிலுவையில் ஆண்டின் போது அறவிடப்பட்ட தொகை 58 சதவீதமான ரூபா 14,078,921 ஆகும். முன்னைய ஆண்டினது நிலுவையில் மேற்கொண்டும் அறவிடப்பட வேண்டியதாக இருந்த மீதி ரூபா 10,196,017 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டினது பட்டியலிடப்பட்ட தீர்வை வரித் தொகை ரூபா 22,434,353 ஆகும். இதில் 62 சதவீதமான ரூபா 14,016,172 ஆண்டின்போது அறவிடப்பட்டிருந்தது. நடப்பாண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகையில் ரூபா 8,418,181 மீதியான நிலுவை மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டு முடிவிலான ஒட்டுமொத்த தீர்வை வரி நிலுவை மீதி ரூபா 18,614,199 ஆகும். ஒட்டுமொத்த அறவீட்டிலான செயல் முன்னேற்றம் 60 சதவீதம் மாத்திரமே. இதற்கமைய, தீர்வை வரி வருவாயைச் சேகரிப்பதிலான செயல் முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை.

### 2.2.3 விற்பனை நிலைய வாடகை

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்த நிலுவை ரூபா 1,892,210 ஆகும். இதில் மீளாய்வாண்டின்போது அறவிடப்பட்ட தொகை 68 சதவீதமான ரூபா 1,293,058 மாத்திரமே.

(ஆ) மீளாய்வாண்டிற்கான விற்பனை நிலையத்தின் பட்டியலிடப்பட்ட தொகை ரூபா 6,596,511 ஆகும். ஆண்டின்போது இதில் 94 சதவீதமான ரூபா 6,191,998 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.4 கடை வாடகை

(i) சபைக்குச் சொந்தமான 02 கடைகளினது ரூபா 42,000 நிலுவை அறவிடப்படவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டில் சபை மேற்கொண்ட கணிப்பின்போது சபைக்குரிய 56 கடைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தமை தெரிய வந்தது.

- பத்துக் கடைகளது உரித்தை மீளப் பெறுவதற்கான அங்கீகாரம் பெறப்பட்ட போதும், எஞ்சியவற்றைத் தீமானிப்பது தொடர்பாக 2016 நவம்பர் 30 வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

- வேறு நபர்களுக்கு வழங்கப்படக்கூடிய கடைகளைத் தெரிவு செய்து கேள்விகளைக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

- சபைக்குரிய 2 கடைகள் உடன்படிக்கை புதும்பிக்கப்படாதும் வாடகை மீளாய்வு செய்யப்படாதும் இருப்பது அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு / முகாமைத்துவ வினைத்திறமையின்மை

(அ) கட்டிடங்களுக்கான திட்டத்தை அங்கீகரித்தல், இசைவுச் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் தீர்வை வரியை அறவிடாது இருத்தல்

(i) 2012 முதல் 2016 செப்டம்பர் 30 வரை கட்டிடங்களுக்கான 731 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருந்தன. இவற்றுள் 609 கட்டிடங்களுக்கான திட்டங்கள் மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டு அவற்றுள் 86 திட்டங்களுக்கு இசைவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. அக்கட்டிடங்கள் 86 இல் 63 க்கான தீர்வை வரியை மதிப்பீடு செய்வதற்காக அவை விலைமதிப்புத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. எனினும், எஞ்சிய 23 தொடர்பாக தீர்வை வரி மதிப்பிடப்பட்டு வருவாயை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) இசைவுச் சான்றிதழ்களைப் பெறுவதற்குச் சமர்ப்பிக்கப்படாத எஞ்சிய 523 கட்டிடங்கள் சம்பந்தமாக நேரடிப் பரிசோதனை மேற்கொண்டு அவை நிர்மாணிக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்தல் நடைபெறவில்லை.

(iii) 2017 மார்ச் 17 ஆந் திகதியன்று வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்த 70674 சதுர அடியுடையதும் 07 மாடிகளைக் கொண்டதுமான களுத்துறை நகர மத்தியில் அமைந்த கட்டிடம் ஒன்று பிரத்தியேக கம்பனி ஒன்றிற்கான இசைவுச் சான்றிதழ் வழங்கப்படாது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நகர சபை இடமளித்திருந்தமையால் நகர சபை பெருமளவு வருவாய் இழப்பிற்குள்ளானது.

(ஆ) அத்துமீறிய நிர்மாண வேலைகள்

(i) அத்துமீறிய நிர்மாண வேலைகளுக்குரிய சேவைகளைத் தெரிவுச் செவ்வை செய்தபோது அத்துமீறிய நிர்மாண வேலைகளை இடைநிறுத்தி அவற்றைச் சட்டபூர்வமானதாக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டது மாத்திரமே நடைபெற்றிருந்தது. இதற்கமைய, பரிசீலிக்கப்பட்ட கோவைகளுக்குரிய நிர்மாண வேலைகள்

சட்டபூர்வமானவை ஆக்கப்படுதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அவதானிக்கப்படாததுடன் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவுமில்லை.

(ii) 2016 ஒக்டோபர் 12 ஆந் திகதி தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் இணைந்து 09 அத்துமீறிய நிர்மாண வேலைகள் நேரடியாகப் பரிசீலிக்கப்பட்டதுடன் நகர சபை அறிவித்தவாறு நிர்மாண வேலைகளை இடை நிறுத்தாது வேலை தொடரப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. நகர சபையின் அங்கீகாரமின்றி நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் 09 தொலைத்தொடர்புக் கோபுரங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

(iii) மேற்படி அத்துமீறிய நிர்மாணவேலைகளுக்கிடையே ஹீனட்டியன்கல வீதியில் மரிக்கார் வீதிக்கு அருகே விளைச்சலற்ற ஏறக்குறைய 30 பர்ச்சஸ் காணி நிரப்பப்பட்டு, களுத்துறை தெற்கு, காலிவீதி 132 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள ஹாட்வெயார் நிறுவனம் ஒன்றிற்குரிய களஞ்சியம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அது நகர சபைக்கு அறிவிக்கப்படாதுமிருந்தது.

(இ) முச்சக்கர வண்டிக் கட்டண அறவீடு

---

சபையின் அங்கீகாரத்திற்கமைய, 2012 ஆம் ஆண்டில் வர்த்தமானி அறிவித்தல் மூலப் வெளியிடப்பட்டவாறு முச்சக்கர வண்டிகளுக்கான தரிப்பிடக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் பின்னர் முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரக் கட்டண வருவாயை அறவிடுவதன் பொருட்டு தரிப்பிடங்களில் இருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட முச்சக்கர வண்டிகளது எண்ணிக்கை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்படவில்லை.

(ஈ) காணிகளைக் குத்தகைக்கு வழங்குதல்

---

களுத்துறை தெற்கு கங்கபட வீதியில் 25/1 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள சபைக்குரிய 06 பர்ச்சஸ் காணி முதலமைச்சரின் அங்கீகாரத்துடன் 2004 மே 06 ஆந் திகதியன்று 30 ஆண்டுகாலக் குத்தகைக்குத் தலைவரால் ஊழியர் ஒருவர் வசிப்பதற்கென வழங்கப்பட்டிருந்தது. களுத்துறை நகருக்கு மிக அருகில் அமைந்துள்ள இக்காணிக்கு 2004 மே 06 தொடக்கம் 2034 மே 06 வரை வருடாந்தம் ரூபா 600 அறவிடப்பட வேண்டுமென உடன்படிக்கை

செய்துகொள்ளப்பட்டிருந்தது. அத்தொகையைத் தீர்மானிப்பதில் அரசாங்க விலை மதிப்பீட்டாளர் ஒருவரது மதிப்பீடு பெறப்படவில்லை.

(உ) நகர சபை நூலகக் காணியில் வர்த்தகக் கூடம் ஒன்றை மீண்டும் நிர்மாணித்தல்

---

(i) வேலைகள் அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் வாடகை செலுத்துபவரால் வர்த்தகக் கூடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இரு தரப்பினரும் செய்து கொண்ட உடன்படிக்கையின் 14 ஆம் பந்திக்கமைய குத்தகையைப் பெறுபவர் அக் கடையின் வரவேற்புக் கூடத்திலோ அல்லது வேறெந்த இடத்திலுமோ வர்த்தகப் பொருட்களையோ அல்லது வேறு பொருட்களையோ வைத்திருத்தல், களஞ்சியப்படுத்துதல், காட்சிக்கு வைத்தல் கூடாதெனினும், சபைக்கு வெளியே வரவேற்புக் கூடத்தில் வர்த்தகப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், திட்டத்தில் இடம்பெறாத கூரை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது.

(ii) இக்கடைக்கு 2013 பெப்ரவரி மாதத்தில் மாதாந்தம் ரூபா 6,250 வீதம் 2 ஆண்டுகளுக்கு அமுலில் இருக்குமாறு வாடகை மதிப்பிடப்பட்டிருந்தது. 2015 பெப்ரவரியின் பின்னர் மீண்டும் கடை வாடகை மீளாய்வு செய்யப்பட வேண்டுமாயினும், 2016 டிசெம்பர் வரை அது நடைபெறவில்லை.

(iii) 2016 மே 20 ஆந் திகதி மீண்டும் உடன்படிக்கை புதுபிக்கப்பட்ட போது புதிய மதிப்பீடு மேற்கொள்ளப்படாது 2013 ஆம் ஆண்டினது மதிப்பீட்டின் அடிப்படையில் மாதாந்த வாடகை தீர்மானிக்கப்பட்டதால் நகர சபை பெறுவதற்கிருந்த வருவாய் இழப்பிற்குள்ளானது.

(ஊ) பொருள் மெய்மையாய்வு

---

(i) அநேக ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதிருந்ததும் பதிவு செய்யப்படாததுமான சொலெக்ஸ் நீர் பவுசர், நிசான் தீயணைக்கும் இயந்திரம், கலி பவுசர் என்பன வாகனப் பிரிவில் இருந்தன.

(ii) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், பட்டோலையில் அமைத்த பொருட்களைப் பரிசீலிக்கையில் ஏற்பட்ட சிக்கலைத் தீர்ப்பதற்காக யோசனைகளும் சிபார்சுகளும் சமர்ப்பிக்கப்பட்டபோதும்,

மரணமடைந்த மற்றும் வேலை இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களது பொறுப்பிலிருந்த சில பொருட்களை நகரசபை பெறுவதற்கோ அல்லது அப்பெறுமதியை அறவிடுவதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(எ) வாகனக் கட்டுப்பாடு

மூன்று வாகனங்களது மைலோமீட்டர்கள் செயலிழந்து இருந்த போதும், அவற்றைப் பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2015 சனவரி 01 முதல் மீளாய்வாண்டு முடிவு வரை இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் ரூபா 4,541,754 தேங்கியிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

(அ) களுத்துறை தெற்கு வெட்டுமகட வர்த்தகக் கூட்டுத்தொகுதிக்கு எதிரே வலை வேலி அமைத்தல் மற்றும் வேலை நிர்வாக அறை என்பவற்றை நிர்மாணித்தல் (பாகிஸ்தான் விளையாட்டு மைதானத்துக்கு எதிரே)

(i) அங்கீகரிக்கப்பட்ட 04 சங்கங்களிலிருந்து ரூபா 1,008,148 க்கான மதிப்பீடு வரையறுக்கப்பட்ட கேள்வி கோரல் மூலம் பெறப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட போதும், அதனை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) உடன்படிக்கைப் பிரகாரம் வேலை 2016 ஏப்ரல் 05 ஆந் திகதி முடிவடைய வேண்டும். எவ்வாறாயினும், வலை வேலி மாத்திரமே அமைக்கப்பட்டிருந்தது.

(iii) மதிப்பீட்டின் 37 ஆம் விடயத்தின் பிரகாரம் வலை வேலியை அமைப்பதற்கான GI குழாய்களது உயரம் 10 அடியாகும். எவ்வாறாயினும், 08 அடி உயரத்திலேயே வேலை முடிவடைந்திருந்ததுடன், உயர்தர GI குழாய்களுக்கு மதிப்பீடு செய்யப்படாது மத்திய தரத்திலானதை மதிப்பீடு செய்ததால் அதன் பாவனைக் காலம் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) உடன்படிக்கைப் பிரகாரம் நிர்வாக அறை நிர்மாணிக்கப்படவில்லை.

(ஆ) முடிவுறாத வேலைகள்

-----------------------------------------

மதிப்பீட்டுத் தொகையான ரூபா 17,869,508 உடைய 21 வேலைகள் அமுலாக்கப்படவில்லை.

(இ) வேலை முடிவுற்றதைக் குறிக்கும் அறிக்கைகள் தயாரிக்கப்படாமை

-----------------------------------------------------------------------------------------------------------------

(i) 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 3,754,579 மதிப்பீட்டில் சபை நிறைவேற்றிய 11 வேலைகளுக்கு வேலை முடிவுற்றதைக் குறிக்கும் அறிக்கை தயாரிக்கப்படாமையால், வேலைகளுக்காக ஆண்டின்போது செலவழித்திருந்த தொகையைக் கணிப்பிட முடியாதிருந்தது.

(ii) களுத்துறை தெற்கு பஸ் தரிப்பிட நிலையத்தில் பழுதடைந்திருந்த உள்ளக வீதியைப் புனரமைப்பதற்கு ரூபா 27,867 மதிப்பிடு தயாரிக்கப்பட்டிருந்தது. இவ்வேலை 2016 யூனில் முடிவடைந்த போதும், வேலை முடிவுற்றதைத் தெரிவிக்கும் அறிக்கை தயாரிக்கப்படவில்லை. இரண்டாவது தடவையாக 64 லீட்டர் தாரிடப்பிடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட போதும் அது நடைபெறவில்லை.

## 3.4 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

------------------------------------------------------------------------

இது தொடர்பான பரிசீலனையின்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) களுத்துறை மாகாண சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள நகர சபையால் கழிவுகளை அகற்றும் 06 ஏக்கர், 02 றூட், 5 பர்ச்சஸ் காணியில் 4 ஏக்கரில் அமைந்துள்ள பொஹொரவத்த கழிவு முகாமைத்துவச் செயற்திட்டம் மற்றும் அதன் விற்பனை நடவடிக்கைகள் என்பன 2009 டிசெம்பர் 23 முதல் 2019 டிசெம்பர் 22 வரை பத்தாண்டுகளுக்குச் செல்லுபடியாகும் விதத்தில் மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபையுடன் உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) களுத்துறை பிரதேச சபை அதிகாரத்துக்குட்பட்ட இடத்தில் அமைந்துள்ள நகர சபையால் கழிவு அகற்றப்படும் இடத்திற்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) கழிவுகளை அகற்றுதல் தொடர்பாக கழிவுப்பொருள் வரி அமுலாக்கப்படவில்லை.

(ஈ) நகர சபைக்குரிய கழிவுப் பொருளகற்றப்படும் காணியில் ஒரு குடும்பம் அத்துமீறிக் குடியேறியிருந்தது.

(உ) கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக நெடுங்கால விசேட பயிற்சி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவில்லை.

(ஊ) கழிவுப் பொருள் முகாமைத்துவத்துக்குத் தேவையான தரவு முறைமை ஒன்றை நகர சபை பேணவில்லை.

### 3.5 செயல் முன்னேற்றம்

(அ) நகர சபையின் நடைமுறைக் கணக்கின் மாதாந்த சராசரி மீதி ரூபா 27 மில்லியனுக்கு அதிகமாக இருந்தது. அதற்குப் புறம்பாக ரூபா 43 மில்லியன் நிலையான வைப்பிலிடப்பட்டுமிருந்தது. இதற்கமைய, சபையின் நிதி நிலைமை நல்ல நிலைமையில் இருந்தபோதும், மீளாய்வாண்டில் நகரசபை அமுலாக்கியிருந்த மூலதனச் செயற்திட்டங்கள் 33 ஆவதுடன், அவற்றினது கிரயம் ரூபா 8,039,710 ஆகவுமிருந்தது. நகரசபை கலைக்கப்பட்டிருந்த சந்தாப்பங்களில் சபையின் அதிகாரம், பணிகள், கடமைகள் என்பவற்றை அமுல்படுத்தவதற்கான அதிகாரம் சபையின் செயலாளருக்கே உரியது. பொதுமக்களது கோரிக்கைகள், முன்மொழிதல்கள், கருத்துகளைக் கேட்டறிதல் போன்றவற்றைத் தயாரித்து, அமுல்படுத்துவதற்கு இயலுமான செயற்திட்டங்களை இனங்கண்டு கொள்ள வேண்டிய போதும், மீளாய்வாண்டில் அவ்வாறு நடவாமையால் பொதுமக்களின் நலனோம்பலை நோக்காகக் கொண்ட சபையாக, பொறுப்புகளை முறைப்படி நிறைவேற்றாத நகர சபையின் பணம் பயனற்றவாறு வங்கியிலிடப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 ஆம் இறுதி ஆண்டின் பொருட்டான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன், 2016 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட பாதீட்டின்படி 2016 ஆம் ஆண்டின்போது 29 வேலைகளை நகர சபை அமுல்படுத்தவிருந்தது. வெளியேயிருந்து பெறப்படும் உதவியுடன் அமுலாக்க

எண்ணியிருந்த செயற்திட்டங்கள் 07 ஆகும். செயற்திட்டங்களை அமுலாக்குவது தொடர்பான செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் பாதீட்டின் அடிப்படையில் அமுலாக்கப்படவிருந்த 29 செயற்திட்டங்களில் 2 மாத்திரமே நிறைவடைந்திருந்தன. செயற்திட்டங்களது பெயர்கள் பின்னர் மாற்றங்களுக்குள்ளாகி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் திட்டமெதுவுமின்றி செயற்திட்டங்களுக்குப் பெயரிடப்பட்டிருந்தன.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) செயற்திட்ட நிர்வாகம்

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு